


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2025) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் 50.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட பாரா பாட்மிண்டன் உள்விளையாட்டரங்க மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, பாராலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீராங்கனை துளசிமதி முருகேசன், பாரா பாட்மிண்டன் விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2025) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் 35.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்ட ரோலர் ஸ்கேட்டிங் மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ரோலர் ஸ்கேட்டிங் விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ஆவடி மாநகராட்சி பட்டாபிராம் பகுதியில்

# நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர் ஆவடி சாமு.நாசர் துவக்கி வைத்தார்!

*திருவள்ளூர் நவ 19;*

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 'நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பட்டாபிராம் சத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு சிறுபான்மையி னர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்பு மருத்துவ முகாமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் ரத்தப் பரிசோதனை, இசிஜி மற்றும் எக்ஸ்ரே உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இல வசமாக செய்யப்பட்டது.

மேலும், முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம். நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கினர். மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுபவர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எக்கோ கார்டியோகிராம், இசிஜி, எக்கோ, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எக்ஸ்ரே பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்று நோய் பரிசோதனைகள், அந்த முகாமிலேயே மேற்கொள்ளப்பட்டது. இந்த முகாமில் 1,500 பேர் பயனடைந்தனர்.

தொடர்ந்து முகாமில் 50 கர்ப்பிணி தாய்மார்களுக்கு தனிச் சிறப்பாக சமுதாய வளைகாப்பு சீர்களையும், ஊட்டச்சத்து பெட்டகத்தையும், மாற்றுத் திறனாளிசுளுக்கு மாற்றுத்திறனுக்கான சதவீத அடையாள அட்டையும் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் வழங்கினார்.

நிகழ்ச்சியில், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, மண்டலக் குழுத் தலைவர் வி.அம்மு, மாநகர பொறுப்பாளர் சண்.பிரகாஷ், பகுதி செயலாளர் பொன்.விஜயன், மாநகர நல அலுவலர் சரஸ்வதி, மாவட்ட சுகாதார அலுவலர் பிரபாகரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத், மற்றும் துறை சார்ந்த அலுவலர் கள் கலந்து கொண்டனர்.

### மு.க.தமிழரசு – நே.சிற்றரசு – தயாநிதி மாறன் – அன்பகம் கலை – எழிலன் நாகநாதன் – சைதை சாதிக் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தி.மு.க. BLA-2 - பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

*சென்னை, நவ.19-*

பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தி.மு.க. BLA2 பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (19.11.2025 - புதன் கிழமை) மாலை 6 மணியளவில் ஆர்ஆர். மகால், சூளைமேடு ஹைரோட்டில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், தொகுதி பொறுப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.

இதில் வட்ட செயலாளர்கள், BLA-2 நிர்வாகிகள் மற்றும் பாக பொறுப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து ஆலோசனை, துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா, கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை

இவ்வாறு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை விடுத்துள்ளார்.



அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் வடக்கு பகுதி பாக நிலை முகவர்கள் (BLA 2) ஆலோசனை கூட்டம், மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில், நடைபெற்ற கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, தொகுதி பார்வையாளர் சன்.பி.முனியாண்டி, பகுதி கழக செயலாளர்கள் டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் BLA2 ஆகியோர் கலந்து கொண்டனர்.

